பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 05 வியாழக்கிழமை 19.01.2023 கதிர் 325

## கல்வியங்காட்டில் நேற்றிரவு வாள்வெட்டு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுச் சந்தியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளரை வாள்களால் வெட்டிய கும்பல் ஒன்று அவரது கடையையும் அடித்துச் சேதப்படுத்தியுள்ளது.

நேற்றிரவு 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 8

வாக்களிப்பு நெருங்கும் சமயத்தில்

## தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு மிரட்டல்

### சி.ஐ.டி. விசாரணை தொடங்கியது

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடக்கவுள்ள நிலையில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குவின் உறுப்பினர்கள் இருவர் நேற்றிரவு அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இது தாடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள (சிஐடி) அதிகாரிகள் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர் என்று பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று ஆற்றிய உரையின் நடுவே பிரதமர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச இந்த விடயத்தைக் கிளப்பியதை அடுத்து, அது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து பிரதமர் விளக்கினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நெருங்கி வரும் நிலையில் தேசிய 2

## இரு நாள்கள் பயணமாக இந்திய அயலுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்பு வந்தார்

### நாளை தமிழ்த் தலைவர்களுடன் சந்திப்பு



இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இரண்டு நாள் பயணமாக இன்று கொழும்பை வந்தடைந்தார். பிற்பகல் 3 மணியளவில் அவர் கொழும்பில் தரையிறங்கினார். 8

## தேர்தலை ஒத்திவைக்கவே ஆணைக்குவிந்கு மிரட்டல்

### நாடாளுமன்றத்தில் சஜித் காட்டம்



ஜனாதிபதியும்அரசிலுள்ளவர்களும் கூட்டுச் சேர்ந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிக்கின்றனர். தேர்தலை ஒத்திவைக்கும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் கள் இருவருக்கு கொலை மிரட்டலும் விடுக்கப்பட் டுள்ளது. இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. நடைமுறையிலுள்ள சட்டத்தின் பிரகாரமே தேர்தலை நடத்த முடியும் என தேர்தல்கள் ஆணைக் குழு உயர்நீதி மன்றத்தில் தெரி வித்துள்ளது. இந்நிலையில், தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அது எதிர்காலத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு இடையூறாக ☞

## யாழ். மாநகர முதல்வர் தெரிவு இன்று கோரமின்றி ஒத்திவைப்பு

### போட்டியின்றி ஆர்னல்ட் தெரிவாகும் வாய்ப்பு தள்ளிப்போனது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் தெரிவு நேற்று இடம்பெறவில்லை. முதல்வரைத் தெரிவு செய்வதற்கு சபையில் போதியளவு உறுப்பினர்கள் இல்லை என்று தெரிவித்த உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவுச் செயற்பாடுகளை 2

## வேலன் சுவாமி கைதை கண்டித்து பல்கலை மாணவர்கள் போராட்டம்







(இ.கலையமுதன்)

இந்து ஆன்மீகவாதியும் சமூக செயற்பாட்டாளருமான, தவத்திருவேலன் சுவாமிகள் கைது செய் யப்பட்டமையை கண்டித்து யாழ்ப்பாணப் பல்கலைகழகம் முன்பாக இன்று மதியம் மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நண்பகல் 12.30 மணியள வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பிரதான நுழைவாயிலுக்கு முன் பாக கூடிய மாணவர்கள் அமைதியாக பதாகைகளைத் தாங்கியபடி அமைதியாக கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"நல்லாட்சி இப்போது நரியாட்சியா?", "கருத்துச் சுதந்திரத்தை பறிக்காதே", "சிவில் சமூகத்தை அடக்காதே", "பெயரில் ஜனநாயகம், 2


## பிச்சை எடுக்கும் இந்த அரசிடமே திருடும் அமைச்சர்கள் உள்ளனர்

### இப்படி வைகிறார் ஹேரா விதானகே எம்.பி.

பிச்சை எடுத்துவரும் இந்த அரசிடம்கூட திருடுகின்ற அமைச் சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர், அப்படியிருக்கும்போது மக்களுக்கு உண்பதற்கு உணவில்லை என்று கூறி தேர்தலை ஒத்திப்போட நடவடிக்கை எடுப்பதை ஏற்க முடியாது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேரா விதானகே தெரிவித்தார்.

பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் காரணம்காட்டி உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு ஒத்திவைக்கும் என்று வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் 2



## அமைச்சரவை விரிவாக்கம் ஜீவன், பவித்திராவிற்கு பதவி

கொழும்பு, ஜன 19

தனது அமைச்சரவையைச் சிறிது விரிவாக்கி யிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஜீவன் தொண்டமான் மற்றும் பவித்திரா வன்னியாராச்சிய ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண் டமான் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார். 2

## அமைச்சரவை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது ஜன பெரமுன கட்சியின் ரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பவித்திரா வன்னியாராச்சி வன உயிரிகள் மற்றும் வனப் பாதுகாப்புத் துறை அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார். ஜனாதிபதி செயலகத்தில் இன்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலை யில் இருவரும் தமது அமைச்சு பதவியை ஏற்றுக் கொண்டனர்.

ஜீவன் அமைச்சுப் பதவியைப் பெற்றதன் மூலம் ஒரே குடும்பத்தின் மூன்றாவதுதலைமுறையைச்சேர்ந்தவர் அமைச்சரவையில் இடம்பெற் றுள்ள சிறப்பைப்பெற்றுள்ளார். அவரதுதந்தை ஆறுமுகம் தொண்டமான் மற்றும் பூட்டன் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோரும் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தார்கள்.

## வேலன்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரில் செய்வது அநியாயம்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் தங் கியிருந்தனர்.

போராட்டத்திற்கு பின்னர் ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவித்தார்யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய செயலாளர் க.அபின். ஜனநாயக ரீதியான போராட்டங் களை தடுக்கும் வகையில் இடம் பெறும் கைதுகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்தார். மாணவர்களை அச்சுறுத்துவதை ஏற்கமுடியாது. தொடர்ச்சியாக நாங்கள் இதற்கெதிராக குரல்கொடுப்போம் – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு எதிராக நல்லூ ரில் நடத்தப்பட்ட போராட்டத்தின் எதிரொலியாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை யான மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன்சுவாமிகள் நேற்று கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றினால் சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## தேர்தல்கள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் இருவரை அச்சுறுத்தியுள்ளமை பாரதூரமானது என்று எதிர்க் கட்சித் தலைவர் கண்டித்தார்.

நாடாளுமன்றத்தில் தேர்தல் விவாதங்கள் இடம்பெற்று வரும் நிலையிலேயே இத்தகைய அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்பதையும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

## பிச்சை எடுக்கும்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் உண்பதற்கு உணவில்லாத நிலையை உருவாக்கியவர்கள்தான் இன்று, மக்களுக்கு உணவு வழங்குவது பற்றிப் பேசுகின்றார்கள். அவர்கள்தான் இப்போதும் மக்களைச் சுரண்டிக் கொண்டும் கொள்ளையடித்துக் கொண்டும் இருக்கின்றார்கள். மிக விரைவில் அவர்களின் பெயர்களை வெளியிடுவோம். மக்கள் முன் அம் பலப்படுத்துவோம்.

அரசு பிச்சையெடுத்துக்கொண்டு இருக்கின்றது. அப்படிப் பிச்சையெடுக்கும் அரசில்கூட திருடுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் – அமைச்சர்கள் உள்ளனர். சரியான தகவலுடன் மக்கள் முன் அவர்களை அம்பலப்படுத்துவோம்.

இவர்கள் தேர்தலை ஒத்திப் போடுவதற்காக பொய்யாகக் காரணம் தேடுகின்றனர். அப்படியென்றால் இந்தத் திருடர்களைப் பிடித்துக் காட் டுங்கள்.

இது தேர்தல் தோல்வி பயமே அன்றி வேறில்லை. பயம் இல்லை என்று காட்டுவதற்காகத்தான் முதன்முதலாக ஓடிச் சென்று தேர்தலுக்குக் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் – என்றார்.

## யாழ்.மாநகர......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைநிறுத்தி சபையை ஒத்தி வைத்தார்.

மாநகர சபை முதல்வராக இருந்த வி.மணிவண்ணின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து அவர் பதவி விலகினார். அவரது இடத்திற்குப் புதியவரைத் தெரிவு செய்வதற்கு இன்றைய தினம் திகதியிடப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் மாநகர சபை மண்டபத்தில் இன்று காலை இதற்காக 24 உறுப்பினர்கள் கூடினர். மொத்தமுள்ள 45 உறுப்பினர்களில் 23 பேர் அமர்வுக்கு வருகை தரவில்லை.

சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் இருக்கும்பட்சத்தில் முதல்வர் தெரிவை நடத்தலாம் என்பதற்கு அமைய, முதல்வருக்கான முன்மொழிவுகளை ஆணையாளர் கோரினார்.

தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் இ.ஆனோல்ட்டின் பெயரை உறுப்பினர் பி.இ.கிறேசியன் முன்மொழிந்தார். வேறு யாருடைய பெயர்களாவது முன்மொழியப்படுகின்றனவா என்று ஆணையாளர் வினவினார். அப்போது சபையில் இருந்த நான்கு உறுப்பினர்கள் ஆர்னோல்ட் போட்டியிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தாம் வெளியேறுகின்றனர் எனக் கூறி சபையில் இருந்து அகன்றனர்.

அந்த நால்வரும் வெளியேறியதை அடுத்து சபை கோரம் இழந்துள்ளது என்று அறிவித்த ஆணையாளர் வாக்கெடுப்பை ஒத்தி வைத்தார். கோரம் இருப்பதாக அறிவிக்கப்பட்டே முன்மொழிவுகள் இடம்பெற்றன, அப்படி முன்மொழியப்பட்ட வேட்பாளரை எதிர்த்தே உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்துள்ளனர் என்பதால் சபை கோரம் இழந்ததாக அர்த்தமாகாது என்று இ.ஆர்னல்ட் வாதாடினார். ஆனால், போட்டியின்றி ஆர்னல்ட் தெரிவு செய்யப்படுகின்றார் என்று அறிவிப்பதற்கு முன்பாக உறுப்பினர்கள் நால்வர் வெளியேறியதால் சபை கோரத்தை இழந்ததாகவே அர்த்தப்படும் என்று விளக்கமளித்த ஆணையாளர், முதல்வர் தெரிவுக்கான அடுத்த திகதி உரிய முறையில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## தேர்தலை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமையும். – இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (19) நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மீதான விவாதம் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் தேர்தல் உரிமையை மீறி அரசு செயற்படுகின்றது. உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கப் பல்வேறு தந்திரங்கள் கையாளப்படுகின்றன.

இந்நேரத்தில் எதிர்ப்புத் தெரிவிக்காவிட்டால் ஜனாதிபதித் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் கூட அரசால் ஒத்திவைக்க முடியும்.

தேர்தலை நடத்துவதற்குப் பணமில்லை எனக் கூறிக்கொண்டே இரண்டு அமைச்சர்கள் இன்று (19) பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். அமைச்சர்களைப் பராமரிக்கப் பெரும் தொகையைச் செலவு செய்யும் அரசிடம் தேர்தலை நடத்துவதற்குப் பணமில்லை எனக் கூறுவது நகைப்புக்குரியது.

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்துக்கு எதிர்க் கட்சிக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அதில் பல குறைபாடுகள் இருந்தாலும் கொள்கையளவில் இது ஒரு நல்ல விடயம். ஆனாலும், இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டதன் நோக்கம் குறித்து பல சந்தேகங்கள் நிலவுகின்றன. இந்தச் சட்டமூலத்தைப் பயன்படுத்தி தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சித்து வருகின்றது.

தேர்தலை ஒத்திவைப்பதற்காகவே நேற்று (18) ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வந்தார். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு இது பொருந்தாது என்றரத்து சேர்க்கப்பட்டால் இந்தச் சிக்கல் அவசியமில்லை – என்றார்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இவர்கள் எல்லாம் மக்கள் பிரதிநிதிகள்தானா?

யாழ்ப்பாணம் மாநகர சபையில் அரசியல்வாதிகள் ஆடும் அ–முகுணி ஆட்டம் சகிக்க முடியாததாக இருக்கின்றது. தாங்கள் மக்கள் பிரதிநிதிகள் என்பதை மறந்து சுயநலன்களுக்காக அவர்கள் நடந்துகொள்ளும் விதம் மக்கள் மத்தியில் அரசியல்வாதிகள் குறித்த வெறுப்பை ஏற்படுத்தி மக்களாட்சியின் உன்னதமான தேர்தலில் இருந்து அவர்களைத் தள்ளி வைத்துவிடும் என்கிற புரிதல்கூட இல்லாமல் அவர்கள் செயற்பட்டு வருகின்றார்கள்.

தற்போதைய தேர்தல் முறைமை காரணமாக சபைகளில் அறுதிப் பெரும்பான்மையை எந்தவொரு கட்சியும் பெற முடியாது என்றிருக்கும் நிலையில் அனைத்துத் தரப்புக்களும் ஓர் இணக்கப்பாட்டுடன் இணைந்து ஆட்சியை முன்னெடுப்பதற்குப் பதில் எந்தவொரு வாய்ப்பையும் தமக்குச் சாதமாக்கிக் கொள்ளலாம் என்கிற இழி நோக்கத்தோடும் அரசியல் பழிவாங்கல் உணர்வோடும் செயற்பட்டுத் தமது அரசியல் தரத்தை அவர்களே குறைத்துக் கொள்கின்றார்கள்.

45 உறுப்பினர்களைக்கொண்ட யாழ். மாநகர சபையில் போதிய உறுப்பினர்கள் இல்லாமையால் இன்று முதல்வர் தெரிவு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தாம் விரும்பாத அல்லது தமது எதிரணியைச் சேர்ந்த ஒருவர் முதல்வர் ஆவதற்கான வாய்ப்பைத் தட்டிப்பறிப்பதற்காகத் திட்டமிட்டே உறுப்பினர்கள் பலரும் இன்றைய அமர்வைத் தவிர்த்திருக்கிறார்கள். இதன் மூலம் தம்மீதான மக்களின் நம்பிக்கையைச் சிதறடித்ததைத் தவிர வேறு எதையும் இவர்கள் சாதிக்கவில்லை.

சபையில் உள்ள 45 உறுப்பினர்களையும் மக்கள் தெரிவு செய்தது அனுப்பி வைத்தது தமது பிரதேசத்தைத் திறம்பட நிர்வகிப்பதுடன் அனைவருக்கும் சமமான வசதி வாய்ப்புகள் கிடைப்பதை உறுதிப்படுத்தவுமே தவிர, சபையை முடங்கச் செய்து அதன் பயன்பாட்டை கீழ்மைப்படுத்தவல்ல. அதை ஒவ்வொரு உறுப்பினர்களும் உணரத் தவறி இருக்கிறார்கள்.

நகர சபையின் ஆட்சிக் காலம் முடிவடைவதற்கு இன்னும் கொஞ்சக் காலமே இருக்கும் நிலையில் இவ்வாறு சபையைக் குழப்பி அதில் தமது அற்ப ஆசைகளைத் தீர்த்துக்கொள்வதில் அவர்கள் காட்டும் ஆர்வம் இவர்கள் எல்லாம் மக்கள் பிரதிநிதிகள்தானா என்று காறி உமிழும் நிலைமையை ஏற்படுத்துவதற்கு முன்பாக, வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கான வழியை அவர்கள் கண்டறிந்து அடுத்த தடவையாவது முதல்வர் தெரிவை முழுமையாக நடத்தி தாங்கள் நேர்த்தியா அரசியல்வாதிகளின் பண்புகளையும் உடையவர்கள் என்பதை அவர்கள் நிரூபிக்கவேண்டும்

# மீண்டும் வரிசை யுகம் ஏற்படும் அபாயம்!

## அரச பேச்சாளர் எச்சரிக்கை

நாடு முழுவதும் மீண்டும் நீண்ட மின்வெட்டு மற்றும் நீண்ட எரிபொருள் வரிசைகள் ஏற்படும் அபாயம் உள்ளதாக அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார அமைச்சரால் முன்மொழியப்பட்டுள்ள கட்டணங்கள் அதிகரிக்கப்படாவிட்டால் மின்வெட்டை நிச்சயமாக நீடிக்க நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கு டொலர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் நிலைமை மேலும் மோசமாக்கியுள்ளதாகவும் எச்சரித்துள்ளார்.

மேலும், மின் உற்பத்திக்காக வாரியம் பெற்ற எரிபொருளை செலுத்தாவிட்டால், மீண்டும் நாடு முழுவதும் எரிபொருள் வரிசைகள் உருவாகும் நிலை உருவாகியுள்ளது.

பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திடம் எரிபொருளை இறக்குமதி செய்வதற்குத் தேவையான டொலர்களை இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முள்ளிவாய்க்காலில் துப்பாக்கிகள் மீட்பு



முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் தனியார் வீடு ஒன்றின் கிணற்றில் இருந்து பாவனைக்கு உதவாத நிலையில் துப்பாக்கிகள் இனம் காணப்பட்டுள்ளன.

கிணற்றில் துப்பாக்கிகளைப் பார்த்தவர்கள் பாதுகாப்புத் தரப்பினருக்குத் தகவல் வழங்கியதை தொடர்ந்து நேற்று குறித்த பகுதிக்குச் சென்ற சிறப்பு அதிரடிப்படையினர் துப்பாக்கிகளை மீட்டு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

மீட்கப்பட்ட துப்பாக்கிகளை நீதிமன்றில் சமர்ப்பிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது ஏ.கே துப்பாக்கி ஒன்றும் கைத்துப்பாக்கி ஒன்றும் உக்கி உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# கோட்டாபயவுக்கு மாதாந்தம் 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா

## அரச கொடுப்பனவாக வழங்கப்படுகிறது



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அரசாங்கத்தால் 19 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும், உணவு மற்றும் பானங்கள் உள்ளிட்ட செலவுகளுக்காக மாதாந்தம் 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி செயலகத்திடமிருந்து எழுத்து மூலம் பெறப்பட்ட தகவலுக்கு அமைய இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தைக்கூட வழங்க முடியாத சூழ்நிலையில் நாடு பொருளாதார நெருக்கடியால் திணறிக் கொண்டிருக்கும் நிலையில் தனியொருவருக்கு இவ்வளவு பெரிய தொகையைச் செலவழிப்பது தேவைதானா என்று அமைச்சர் ஒருவரிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு அரசின் ஒட்டுமொத்தச் செலவினத்துடன் ஒப்பிடும்போது முன்னாள் ஜனாதிபதிக்கான கொடுப்பனவுகள் பெரியதில்லை, அதைக் குறைப்பதன் மூலம் அரசுக்கு ஆறுதலும் கிடைக்கப்போவதில்லை என்று அமைச்சர் பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் ஒட்டுமொத்த செலவீனங்களைப் பார்க்கும்போது இது ஒரு சிறிய செலவு மட்டுமே.1977 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை அரசாங்க செலவினம், வருமானத்தை விட அதிகமாக உள்ளது. அன்றாட செலவுகளைப் பேணுவதற்கு போதிய வருமானம் இல்லாத நாடாக நாம் மாறிவிட்டோம்.

இந்தச் சிறிய செலவுகளைப் பார்ப்பதற்கு முன், பெரிய அளவிலான செலவுகளைப் பார்க்கவேண்டும். அதாவது அரசு ஊழியர் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் கடன் வட்டி செலுத்துதல். போன்ற பெரிய அளவிலான திட்டங்களில் எதையும் குறைக்க முடியாது. அப்படியானால் எங்கே குறைப்பது என்று தேடவேண்டும்.

நான் இப்போது நான்கு அமைச்சுக்களின் பாரத்தை தனியாளாகச் சுமந்து வருகிறேன். இதனால் எஞ்சும் தொகையை பாருங்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்படும் வாகன ஒதுக்கீடுகள் தொடர்பில் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை எனவும் கூறப்படுகின்றது.

# துப்பாக்கியுடன் புகுந்த ஜேவிபியினர் எங்களை சுட்டுக்கொல்லப் பார்த்தனர்

## தனது 2 வயது அனுபவத்தை விவரிக்கிறார் ஹிருணிகா



கடந்த 1989 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் துப்பாக்கிகளுடன் தமது வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர் என ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் பிரிவின் தலைவியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

அந்தக் காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் ஒரு வீட்டுக்குள் புகுந்தால், அங்குள்ள அனைவரையும் கொலை செய்வார்கள் எனவும் எனினும் முதல் முறையாக தமது வீட்டுக்குள் வந்த மக்கள் விடுதலை முன்னணியினர் கொலை செய்யப்பட்டனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே ஹிருணிகா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இளம் தலைமுறையினர் ஜே.வி.பி பக்கம் செல்வதாகப் பேசப்படுகிறது. எனக்கு தற்போது 35 வயது, எனக்கு இரண்டு வயதாக இருக்கும்போது ஜே.வி.பியினர் எனது தந்தையை கொலை செய்ய வந்தனர்.

இரண்டு வயது என்பதால், எனக்கு பெரிதாக ஞாபகமில்லை. இரவு நேரத்தில் கொலன்னாவையில் உள்ள எங்களது வீட்டுக்கு ஜே.வி.பியை சேர்ந்த நான்கு பேர் வந்தனர்.

தொலைக்காட்சியில் நாடகம் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, வீட்டின் கதவு மூடப்பட்டிருந்தது. ஓர் இளைஞன் கதவை தட்டி லக்கி அய்யே லக்கி அய்யே என்று கூப்பிட்டார். எனது பாட்டனார் கதவைத் திறந்தபோது துப்பாக்கி முனையில் கதவை தள்ளிக் கொண்டு உள்ளே வந்தனர். நான் எனது தந்தையின் மடியில் அமர்ந்திருந்தேன்.

தன் மீது துப்பாக்கி சூடு நடத்தப்படலாம் என்று எனது தந்தை என் மீது துப்பாக்கி சூடுபடாதபடி என்னை மறைத்துக்கொண்டிருந்தார் என எனது அம்மா கூறினார்.

பொதுவாக அந்தக் காலத்தில் ஜே.வி.பியினர் ஒரு வீட்டுக்குள் புகுந்தால், வீட்டில் உள்ள அனைவரையும் கொலை செய்துவிட்டே வெளியில் வருவார்கள்.

இலங்கையில் முதல் முறையாக எனது தந்தையை கொலை செய்ய வந்த ஜே.வி.பியினருடன் வீட்டில் இருந்தவர்கள் மோதியுடன் வீட்டுக்குள் வந்த ஜே.வி.பியினர் நால்வரும் கொல்லப்பட்டனர்.

அந்த வரலாறு மிக கொடூரமானது. அந்த காலத்தில் தமக்கு எதிரில் கொல்லப்பட்ட தமது பெற்றோர் தொடர்பில் தற்போதுள்ள இளைஞர்களுக்கு எப்படியான மனநிலை இருக்கும் என எண்ணிப்பாருங்கள். எந்த கட்சியும் வரலாற்றில் தவறுகளை செய்திருக்கலாம். எமது கட்சி தவறு செய்தது என்பதை ஏற்றுக்கொள்ளும் போதே அந்தக் கட்சி மற்றும் அதன் தலைவர்கள் அங்கீகரிக்கப்படுவார்கள்.

செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டால், வெறுக்கும் மக்கள் மன்னிப்பு வழங்குவார்கள் எனவும் ஹிருணிகா பிரேமச்சந்திர மேலும் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கப் போர்க் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில்

## கூட்டுப் பயிற்சியில் இணைய வந்தது

அமெரிக்க கடற்படையின் யுஎஸ்எஸ் அங்கரேஜ் (USS "Anchorage) என்ற கப்பல் இன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.


இலங்கை கடற்படையினருடனான பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்தக் கப்பல் கொழும்புக்கு வந்து சேர்ந்துள்ளது.

அமெரிக்க கப்பலுக்கு இலங்கை கடற்படையினர் மரபுகளுக்கு அமைவாக மரியாதை செலுத்தினர். 208மீ நீளமுள்ள போர்க் கப்பலான அங்கரேஜ் 477 குழு உறுப்பினர்களால் நிர்வகிக்கப் படுகிறது. கப்டன் டிஜே கீலர் கப்பலின் தலைமை அதிகாரி யாகப் பணியாற்றுகிறார்.

இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரி இன்று மேற்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் மேற்கு கடற்படை தளபதி ரியர் அட்மிரல் சுரேஷ் டி சில்வாவை சந்தித்துப் பேசுகின்றார். இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான எஸ்எல்என்எஸ் கஜபாகு மற்றும் எஸ்எல்என்எஸ் சமுதுராவுடன் இணைந்து பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடவுள் ளது. பயிற்சியை முடிந்துக்கொண்டு இம்மாதம் 27 ஆம் திகதி கப்பல் இலங்கையிலிருந்து புறப்படும்.

# தலவாக்கலை தீ விபத்து அரவிந்குமார் பார்வை





தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலவாக்கலை மிடில்டன் தோட்டத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 07 வீடுகள் முற்றாகவும், 05 வீடுகள் பகுதியளவிலும் எரிந்து நாசமாகியுள்ளன.

குறித்த வீடுகளில் இருந்த 49 பேர் தற்காலிகமாக உறவினர்கள் வீடுகளிலும், தமிழ் மகா வித்தியாலயத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தீ விபத்துக்கான காரணம் இதுவரை உறுதி செய்யாத போதிலும் மின் கசிவின் காரணமாக தீ ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தீ ஏற்பட்ட போது வீட்டிலிருந்தவர்கள் அபயக்குரல் எழுப்பினர் எனவும், அதன் பிறகு அயலவர்கள் ஓடி வந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் மற்றும் பாடப் புத்தகங்கள் உள்ளிட்ட பொருள்கள் தீக்கிரையாகியுள்ளன.

தீ விபத்து இடம்பெற்ற பகுதிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சென்ற பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான அரவிந்தகுமார் உள்ளிட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு அவரின் ஊடாக பெற்று கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# வேலன் சுவாமி கைதானமைக்கு பிரித்தானிய எம்.பி. கண்டனம்!



'இலங்கை ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்தின் போது அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக சிவில் உரிமை செயற்பாட்டாளரும் இந்து சமய தலைவருமான வேலன் சுவாமிகள் இலங்கை பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டமையைத் தான் கண்டிப்பதாக பிரித்தானிய தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சியோபைன் மெக்டோனாக் தெரிவித்துள்ளார். தமது உத்தியோகபூர்வ ருவிட்டர் பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைதியான முறையில் போராட்டம் நடத்துவது மனிதனின் அடிப்படை உரிமை எனவும் அதில் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் 2022 இல் இலங்கையில் ஜனாதிபதி பதவியில் ஏற்பட்ட மாற்றத்தின் மூலம் நாட்டின் மனித உரிமைகள் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்ற மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சமீபத்திய மதிப்பீட்டை தான் ஏற்றுக்கொள்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# குளத்தில் மிதந்த மூதாட்டி சடலம்

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு குளத்திலிருந்து பெண் ஒருவரின் சடலம் இன்று(19) காலை மீட்கப்பட்டது.

அதே பகுதியைச் சேர்ந்த 60 வயது மூதாட்டி ஒருவருடைய சடலம் அது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த அவர்கள் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூறு பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

பெண்ணின் இறப்பு கொலையா தற்கொலையா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியா – சீனா இடையே மேலும் பிரச்சினை வளர்க்கிறது நேட்டோ

## இப்படிக் குற்றஞ்சாட்டுகிறது ரஷ்யா

இந்திய – சீன உறவில் மேலும் பிரச்சினைகளை உருவாக்க நேட்டோ முயல்வதாக ரஷ்யா குற்றம்சாட்டியுள்ளது.

ஸ்பெயின் தலைநகர் மட்ரிட் நகரில் நடைபெற்ற நேட்டோ கூட்டமைப்பின் உச்சிமாநாட்டில் அறிவிக்கப்பட்ட பிரகடனம் தொடர்பாக ரஷ்யா அறிக்கை வெளியிட்டுள்ளது. மேலும், இந்த அறிக்கையை மையப்படுத்தி ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கி லாரோவ் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: ”இராணுவ கூட்டமைப் பான நேட்டோ சர்வதேச விவகாரங்களில் குறிப்பாக இந்தோ–பசுபிக் பிராந்தியத்தில் முக்கிய கவனம் செலுத்தப் போவதாக பிரகடனப்படுத்தி உள்ளது. இந்திய – சீன உறவில் மேலும் பிரச்சினைகளை உருவாக்க நேட்டோ முயல்கிறது என்பது இதன்மூலம் தெளிவாகி உள்ளது.

ஐரோப்பிய கண்டத்தில் வாழும் மக்களுக்கான அமைப்பாக மட்டும் நேட்டோ இருக்கவில்லை. அதற்கு உலகலாவிய திட்டம் உள்ளது. குறிப்பாக, பொருளாதார ரீதியாக வளர்ந்து வரும் சீனா, இந்தியா, துருக்கி, பிரேசில், அர்ஜென்டினா, எகிப்து மற்றும் பல்வேறு ஆப்ரிக்க நாடுகள் ஆகியவை குறித்து நேட்டோ தனது பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளது. இந்த நாடுகளிடம் இயற்கை வளங்கள் அதிகமாக இருப்பதால் அவற்றின் வளர்ச்சியும் அதிகமாக இருக்கிறது. இதன் காரணமாக சர்வதேச அளவில் புதிய பொருளாதார மையங்கள் உருவாகி வருகின்றன. இதை தடுக்க மேற்கத்திய நாடுகள் முயல்கின்றன.

புதிய காலனியாதிக்கத்தை உருவாக்கும் மேற்கத்திய நாடுகளின் முயற்சியைத் தவிர்க்கும் நோக்கில், ஆசிய, ஆப்ரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளுடன் இணைந்து ரஷ்யா செயல்பட்டுவருகிறது. ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு, பிரிக்ஸ், சிஐஎஸ், ஈஏஈயு போன்ற சர்வதேச அமைப்புகள் இதில் முக்கிய பங்காற்றி வருகின்றன. மேலும், பல புதிய சர்வதேச அமைப்பு களை உருவாக்க நாங்கள் முயன்று வருகிறோம். இந்த அமைப்புகளை சீர்குலைக்க நேட்டோ முயல்கிறது.

ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் எதிராக இந்தோ பசுபிக் நாடுகளைத் திருப்பும் நோக்கில் மேற்கத்திய நாடுகள் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஆசிய நாடுகளுக்குள் பிரச்சினைகளை அதிகரிக்கும் பழைய உத்திகளை நேட்டோ மேற்கொள்கிறது. ரஷ்யாவுக்கு எதிராக சர்வதேச யுத்தத்தை மேற்கொள்வதற்கான அமெரிக்காவின் திட்டம்தான் தற்போது உக்ரைனில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அமெரிக்காவும் அதன் செயற்கைக் கோள்களும் சர்வதேச யுத்தத்திற்கான திட்டமிடல்களுடன் இயங்கி வருகின்றன. இந்த உண்மையை யாரும் மறுக்க முடியாது. மேற்கத்திய நாடுகளில் உள்ள சார்பற்ற அரசியல் அறிஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள் ஆகியோரின் அறிக்கைகள் இதைத் தெளிவுபடுத்துகின்றன.

2021 மார்ச் மாதம் உக்ரைன் விடுத்த பேச்சுக்கான அழைப்பை ரஷ்யா ஆதரித்தது. போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் அந்த நாடு முன்மொழிந்த அம்சங்களை ஏற்று ஒப்பந்தத்தை நாங்கள் ஏறக்குறைய இறுதி செய்துவிட்டோம். ஆனால், மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்குக் கொடுத்த சிறிய அடி காரணமாக அந்த நாடு தற்போது ஒப்பந்தத்தை ஏற்க மறுக்கிறது. அதன் பிறகு ஒவ்வொரு முறையும் மேற்கத்திய தலைவர்கள் பேசிவருவது என்னவென்றால், 'பேச்சு வார்த்தை நடத்த இதற்குள் என்ன அவசரம்' என்பதுதான்” என தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சி தேர்தல் மூலம் ஆட்சியை மாற்ற முடியாது

## இப்படிச் சொல்கிறார் பாலித ரங்கே எம்.பி.

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூலம் ஆட்சியை மாற்ற முடியாது. அரசு தோல்வியடைந்தாலும் ஜனாதிபதி அப்படியே இருப்பார். நாடாளுமன்றமும் அப்படியே இருக்கும்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி பின்னடிக்கின்றதா? வேட்புமனுத் தாக்கல் நிறைவடைய தேர்தல் ஒத்திவைக்கப்படுமா? ஆகிய கேள்விகளுக்குப் பாலித ரங்கே பண்டார பதிலளிக்கும்போது இதைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சிசபைத்தேர்தல்ஒத்திவைக்கப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது. அது தேர்தல்கள் ஆணைக்குழு எடுக்கும் முடிவு.

ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேர்தலை எதிர்கொள்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாம் தேர்தல்களில் வென்றும் இருக்கின்றோம், தோல்வியடைந்தும் இருக்கின்றோம்.

நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றோம் என்பதற்காக நாம் ஒதுங்கி இருக்கவில்லை. வேலை செய்கின்றோம். இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூலம் ஆட்சியை மாற்ற முடியாது. அரசு தரப்பு இந்தத் தேர்தலில் தோல்வியடைந்தாலும் ஜனாதிபதி அப்படியே இருப்பார். நாடாளுமன்றமும் அப்படியே இருக்கும்.

நிலைமை அப்படி இருக்கும்போது தேர்தல் தோல்வி பற்றி நாம் பயப்படத் தேவையில்லை – என்றார்.




# இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் அரசின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்

## ஆரூடம் கூறுகின்றார் ஜே.வி.பி. தலைவர்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அரசின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும். அதனாலேயே அரச தரப்பினர் இந்தத் தேர்தலுக்கு அஞ்சுகின்றார்கள். தேர்தல்கள் ஆணைக்குழு அரசின் தேவைக்கு ஏற்பவே செயற்படுகின்றது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

'உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடக்குமா?' என்ற கேள்விக்கு அநுரகுமார பதிலளிக்கும்போது தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஆனால், ரணில் தேர்தலை ஒத்திப்போடுவதற்கே முயற்சி செய்கின்றார். அரசமைப்பில் அதற்கு இடமில்லை. இதனால் தேர்தல் நடத்தப்படவே வேண்டும்.

தேர்தல்கள் ஆணைக்குழு அரசின் தேவைக்கு ஏற்பவே செயற்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இல்லை. 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவுக்குக் கிடைத்த 69 இலட்சம் வாக்குகளும் ரணிலுக்கு எதிரான வாக்குகள். அப்படியாயின் ரணிலால் எப்படி ஜனாதிபதியாக இருக்க முடியும்?

சோமாலிய நாட்டு கடற்கொள்ளையர்கள் கப்பலைப் பிடித்து வைத்திருப்பது போல் திருடர்கள் இலங்கையைப் பிடித்து வைத்துள்ளார்கள். நாட்டை ஆட்சி செய்கின்றார்கள். இவர்களுக்கு மக்கள் ஆணை இல்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தினால் அவர்களின் நிலை என்னவென்று தெரியவரும். அவர்கள் படுதோல்வியடைவார்கள்.

மக்கள் ஆணை இல்லாத இந்த அரசால் ஆட்சி செய்ய முடியாது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இந்த அரசு தோல்வியடைந்தால் மக்கள் நாடாளுமன்றத் தேர்தலைக் கேட்பார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டி வரும். அப்போது அதிலும் இந்த அரசு தோல்வியும். அப்போது ஆட்சி கலையும். ஜனாதிபதி இல்லாமல் போவார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அரசின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும். அதனாலேயே அரச தரப்பினர் இந்தத் தேர்தலுக்கு அஞ்சுகின்றார்கள்.

பணம் இல்லை என்று கூறி தேர்தலை ஒத்திப்போடும் ஜனாதிபதியின் திட்டத்துக்கு மக்கள் இணங்கினால் ஜனாதிபதித் தேர்தலையும் பணம் இல்லை என்று கூறி ஒத்திப்போடுவார் ரணில் – என்றார்.

# குட்டித் தேர்தலில் போட்டியிட இருந்த பெண் ஒருவர் வெட்டிப் படுகொலை!

கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடைப் பிரதேசத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவிருந்த 65 வயதான பெண் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொடை - யொகொதமுல்லையில் உள்ள அவரது வீடும் தீ வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் படி, குறித்த பெண் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் இம்முறை தேர்தலில் போட்டியிட இருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக கம்பஹா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



### கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாக

# இன்னும் சில நாள்களில் சீனாவில் நாளுக்கு 36 ஆயிரம் பேர் இறப்பர்

## லண்டன் நிறுவனம் எதிர்வுகூறல்

சீனாவில் தொடங்கவுள்ள புத்தாண்டுக் கொண்டாட்ட விடுமுறையின்போது அங்கு நாளொன்றுக்கு 36 ஆயிரம் பேர் உயிரிழப்பார்கள் என்று லண்டனைத் தலைமையிடமாகக் கொண்ட ஆய்வு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

கொரோனா பெருந்தொற்று சீனாவிலேயே முதலில் பரவத் தொடங்கியது. எனினும் இரும்புக் கரம்கொண்டு தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தியது அந்த நாடு. நிலைமை வழமைக்குத் திரும்பியதாக எண்ணிக்கொண்டிருந்த சமயத்தில் கடந்த ஆண்டு பிற்பகுதியில் அங்கு மீண்டும் கொரோனா திரிபு வீரியத்துடன் பரவத் தொடங்கியது.

இதனால் அங்கு நாளாந்தம் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழக்கிறார்கள் என்று சீனாவுக்கு வெளியே இருந்து செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், சீனா அதை மறுக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான உண்மை விவரங்களைச் சீனா தெரிவிக்கவேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தி வருகின்றது.

இந்த நிலையில், சீனப் புத்தாண்டு ஜனவரி 22ஆம் திகதி தொடங்குகிறது. இதை முன்னிட்டு சீனாவில் 7 நாட்களுக்கு பொதுவிடுமுறை வழங்கப்பட உள்ளது. இந்த விடுமுறை நாட்களில் அங்கு நாளொன்றுக்கு 36,000 பேர் கரோனா தொற்றால் உயிரிழக்கக் கூடும் என்று லண்டனைத் தலைமையிடமாகக் கொண்ட ஆய்வு நிறுவனம் கணிப்பு வெளியிட்டுள்ளது.

## பகவத்கீதை மீது சத்தியம் செய்து பதவியேற்ற அமெரிக்க ஆளுநர்



அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாண துணை ஆளுநராகத்தெரிவாகியிருக்கும் இந்தியாவில் பிறந்த அருணா மில்லர், பகவத் கீதை மீது சத்தியம்செய்து பதவியேற்றுக்கொண்டார்.

இந்தியாவின் தெலங்கானா மாநிலத்தலைநகர்ஹைதராபாத்தில் பிறந்த அருணா மில்லர் 7 வயதாகும்போது அமெரிக்காவுக்குக் குடும்பத்தோடு இடம்பெயர்ந்தார். தற்போது 58 வயதாகும் அவர், கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற மேரிலேண்ட் மாகாண துணைநிலை ஆளுநர் பதவிக்கான தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக களமிறங்கினார். தேர்தலில் வெற்றி பெற்றதை அடுத்து அவர் துணைநிலை ஆளுநராக பதவியேற்றுக்கொண்டார். பகவத்கீதை மீது சத்தியம் செய்து அவர் பதவி ஏற்றார்.

மேரிலேண்ட் மாகாணத்தின் துணைநிலை ஆளுநராகி இருக்கும் முதல் இந்தியர், முதல் கருப்பினத்தவர், முதல் பெண் ஆகிய பெருமைகளுக்கு இவர் சொந்தக்காரராகி இருக்கிறார். பதவியேற்றுக்கொண்டதை அடுத்துப் பேசிய அருணா மில்லர், "மேரிலேண்ட் என்னை பெருமை அடையச் செய்துள்ளது. என் மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு நன்றி. நாம் தற்போது ஒரு வரலாற்றை உருவாக்கி இருக்கிறோம். அதிகாரம் வரலாற்றை உருவாக்குவதில்லை; மக்கள்தான் வரலாற்றை உருவாக்குகிறார்கள் என்பது நிரூபணமாகி உள்ளது. எனது இந்த வெற்றி நம் அனைவருக் குமானது" எனத் தெரிவித்தார்.

அருணா மில்லரின் தந்தை ஒரு பொறியியல் மாணவராக 1960-களில் முதல் முறையாக அமெரிக்கா சென்றார். அங்கு வேலை தேடிக்கொண்டு 1972-இல் தனது குடும்பத்தை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றுள்ளார். அப்போது, 7 வயது சிறுமியாக அருணா அமெரிக்கா சென்றார். அருணாவுக்கு ஒரு சகோதரரும் ஒரு சகோதரியும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பதவி விலகுகிறார் நியூஸி பிரதமர்!



நியூசிலாந்துபிரதமர்ஜெசிந்தா ஆர்டென் அடுத்த மாதம் பதவி விலகுகிறார் என்று அறிவித்துள்ளார். பிப்ரவரி 7ஆம் தேதிக்கு முன்னர் தொழிலாளர் கட்சித் தலைவர் பதவி யிலிருந்தும் தான் விலகுவார் என்றும் அறிவித்துள்ளார்.

வரும் ஒக்டோபர் 14ஆம் தேதி நியூசிலாந்தில் பிரதமர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஜெசிந்தா ஆர்டென் முன்கூட்டியே பதவி விலகியுள்ளார். அடுத்துவரும் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நான் எனது பணிக்காலத்தில் அந்தப் பதவியின் வாயிலாக எதையெல்லாமோ செய்ய லாம் என்றநம்பிக்கையைக்கொண்டிருந்தேன். துரதிர்ஷ்டவசமாக அதைச் செய்யமுடியவில்லை. அப்படியிருக்க இன்னும் அப்பதவி யில் தொடர்வது பதவிக்கு பொருந்தாதது என்று கருதுகிறேன் என் றார் ஜெசிந்தா.

ஜெசிந்தா ஆர்டென் உலக வரலாற்றில் பிரதமர் பதவியை வகித்த இளம் வயது பெண் என்ற மதிப் பைப் பெற்றவராவார். 2017இல் பிரதமராகப் பதவியேற்றபோது அவருக்கு வயது 37. அவரது பதவிக் காலத்தில் கொரோனா பெருந்தொற்று சவாலை திறம்பட எதிர்கொண்டார். அதற்காக உலகம் முழுவதும் பாராட்டப்பெற்றார்.

பொருளாதார மந்த நிலை, க்ரைஸ்ட்சர்ச் துப்பாக்கிச் சூடு, ஒயிட் தீவு எரிமலை வெடிப்பு என பல சவால்களை அவர்தனதுபதவிக்காலத்தில் சந்திக்க நேர்ந்தது.

தேசத்தை அமைதியான சூழலில் வழிநடத்துவதற்கும் சவால்களுக்கு மத்தியில் தலைமையேற்று வழி நடத்துவதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. பெரிய சவால்கள் மிகவும் அதிகமாக இருக்கிறது. அந்த அழுத்தத்தின் ஊடே அரசை நிர்வகிக்கிறோம். இந்தச் சவால்களை சுமக்க அதற்குத் தீர்வு காண புதிய வலுவான தோள்கள் தேவை. அதனால் பதவிவிலகமுடிவுசெய்துள்ளேன்.

இருப்பினும், நியூசிலாந்து மக்கள் என்னை எப்போதும் அன்பான தலைவராக நினைவில் கொள்வார்கள் என நம்புகிறேன். நியூசிலாந்துதலைமைப் பொறுப்பிலிருந்துநான்விலகும் இச்சூழலில் உங்களிடம் சில உணர்வுகளைவிட்டுச்செல்வதாக நம்புகிறேன்.

அன்பானவராக இருக்கும் போது வலுவான வாரா கவும் இருக்கலாம். மற்றவர்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்தும்போது முடிவெடுக்கும் தன்மையையும் பெறலாம்.

நேர்மறை சிந்தையுடன் பணியில் கவனத்தை குவிக்கலாம். நீங்கள் உங்கள் பாணியில் ஒரு தலைவராக இருக்கலாம். எப்போது பதவி விலகலாம் என்று தெரிந்திருக்கும் தலைவராக இருக்கலாம். இதை நான் உங்களுக்கு விட்டுச்செல்கிறேன்" -என்று அவர் தெரிவித்தார்.

## ஆஸ்திரேலியாவில் இந்துக் கோயில் சூறை!

ஆஸ்திரேலியாவில் மேலும் ஒரு இந்து கோயிலை சூறையாடப்பட்டுள்ளது. காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக் கையாளர்களே இதன் பின்னணியில் இருந்தனர் என்று அதிகாரிகள் கூறினர். இந்தியாவில் உள்ள பஞ்சாபைப் பிரித்து காலிஸ்தான் என்ற தனிநாட்டை உருவாக்க வேண்டும் என்பது காலிஸ் தான் ஆதரவாளர்களின் நீண்ட காலகோரிக்கையாகும். இந்த அமைப்பினர் இந்தியா உள்ளிட்டசில நாடுகளில்ஒடுக்கப்பட்டு விட்டாலும் கனடா, ஆஸ்திரேலியாஉள்ளிட்ட வெளிநாடுகளில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர்.



இந்நிலையில், ஆஸ்திரேலியாவின் விக்டோரியாமாகாணத்தில் அமைந்துள்ள சிவா- விஷ்ணு கோயிலுக்குள் நேற்றுமுன் தினம் காலிஸ்தான் ஆதரவாளர்கள்புகுந்தனர். கோயில் வளாகத்தில் இருந்த பொருள்களை அவர்கள் அடித்து நொருக்கியதுடன் சூறையாடினர். பின்னர் அவர்கள் அங்கிருந்து தப்பியோடி விட்டனர்.

ஆஸ்திரேலியாவில் தை பொங்கல் உள்ளிட்ட பண்டிகையின் போது இந்த சிவா - விஷ்ணு இந்து கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வருவது வழக்கம். அவர்கள் வரும்போது கோயில் மோசமான நிலையில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே அவர்கள் இவ்வாறு செயல்பட்டுள்ளனர் என்று தெரிகிறது. இதுதொடர்பாக விக்டோரியா மாகாண பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

"இலங்கையில் மதரீதியாகவும், இனரீதியாகவும் துன்புறுத்தல்களை எதிர்கொண்டுதான் ஆஸ்திரேலியா வில் குடிபுகுந்துள்ளோம். இது இந்துக்கள் அமைதியாக வழிபாடு நடத்தும் கோயில். காலிஸ்தான் ஆதரவாளர்கள்தங்கள் கோபத்தை இந்த இடத்தில் காட்டுவது சரியல்ல. இது அவர்களது மோசமான வெறுப்பு மனப்பான்மையைக் காட்டுகிறது. அவர்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். வழிபாடு நடத்தும் கோயில்கள் மீது தாக்குதல் நடத்துவது சரியான செயல் அல்ல" என்று தாக்குதல் குறித்துக் கருத்துத் தெரிவித்தார் கோயிலுக்கு வந்த பக்தை உா செந்தில்நாதன்.

விக்டோரியா மாகாணத்தில் அமைந் துள்ள சுவாமி நாராயண் கோயிலை காலிஸ்தான் ஆதரவாளர்கள் கடந்த வாரத்தில்தான் சூறையாடினர்.



# மலையக கட்சிகளுடனும் பேசுவேன் உறுதிமொழி வழங்கினார் ஜனாதிபதி!

தற்போது வடக்கு கிழக்கு தமிழ் கட்சிகளுடன் கலந்துரையாடுவதைப்போன்று மலையக கட்சிகளுடனும் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா நூற்றாண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

தமிழ் கட்சிகளுடன் இன்று இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் பேசுகிறேன். ஆனால், அது மாத்திரம் போதாது.

நான் இப்படிக் கூறும்போது, இந்நிகழ்வில் கலந்துகொண்டுள்ள மனோகணேசன் என்னை உற்று நோக்குகிறார்.

வடக்கு கிழக்கு கட்சிகளுடன் கலந்துரையாடுவதைப் போன்று மலையகக் கட்சிகளுடனும் உரையாடுவேன் என நான் அவருக்கு உறுதி கூற விரும்பு கிறேன்.

முஸ்லிம் கட்சிகளுடனும் நான் பேசுவேன். இலங்கையில் சிங்களவர், இலங்கைத் தமி ழர், மலையக தமிழர், முஸ்லிம் கள் என இனக்குழுக்கள் வாழ்கிறார்கள்.

அனைவரையும் இணைத்து இலங்கை தேசத்தைக் கட்டி எழுப்புவதே என் நோக்கம்.

அனைவருக்கும் வெவ்வேறு பிரச்சினைகள் உள்ளன. ஆகவே எல்லாவற்றையும் ஒன்றாக ஒரே இடத்தில் பேச முடியாது. ஒன்றுடன் ஒன்று சிக்கி சிக்கலை ஏற்படுத்தும்.

ஆகவே வெவ்வேறு இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளுடன் வெவ்வேறாகப் பேச முடிவு செய்துள்ளேன். கடைசியில் அனைவரும் ஒன் றாக அமர்ந்து இலங்கை தேசத் தைக் கட்டி எழுப்புவோம்.’ எனத் தெரிவித்துள்ளார்.

# ராஜபக்ஷவினரின் அரசியல் பலத்தை முடிவுக்குக் கொண்டுவரல் வேண்டும்!

## சம்பிக்க ரணவக்க திடசங்கற்பம்



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஊழல்வாதிகளான ராஜபக்ஷவினரின் அரசியல் பலத்தை 10 வீதமாகக் குறைக்க அனைத்து அரசியல் கட்சிகளும் கவனம் செலுத்த வேண்டும் என 43 ஆவது படையணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

43 ஆவது படையணி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ராஜபக்ஷவினரின் அரசியல் பலத்தை 10 வீதமாக குறைத்து, அவர்களின் அரசியல் அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

ந்த தேர்தலின் பின்னர் நாட்டில் புதிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் அரசியல் அமைப்பை களத்துக்குக் கொண்டு வருவோம்.

இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மண், கருங்கல், மணல் மீது அதிகாரத்தை தக்கவைத்துக்கொண்டிருக்கும் மோசடியான வியாபாரக் கும்பலை விரட்டியடிக்க வேண்டும்.

மேலும் உள்ளூராட்சி சபைகள் மத்திய அரசாங்கத்தின் நிதியை நம்பி இயங்கும் சபைகளாக அல்லாது சுய பலத்தில் வளர்ச்சியடையும் சபைகளாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டும்.

உள்ளூராட்சி சபைகளுக்கு வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் தொடர்ந்தும் நிதியை வழங்க முடியாது என்பதால், அவற்றைத் தமக்குக் கிடைக்கும் வருமானத்தில் மக்களுக்கு சேவையாற்றும் இடங்களாக மாற்ற வேண்டும் எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்திற்கு வெளியே 200 அதிபர் வெற்றிடங்கள்

யாழ். மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களையும் தவிர ஏனைய மாவட்டங்களில் சுமார் 200 இற்கு மேற்பட்ட அதிபர் வெற்றிடம் நிரப்பப்படாமல் உள்ளன எனக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

வட மாகாண கல்வி அமைச்சுக்கு உட்பட்ட யாழ்ப்பாணம் தவிர்ந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அநேகமான பாடசாலைகளில் நிரந்தர அதிபர் இன்மையால் பாடசாலைகள் நெருக்கடி நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் நியமனத்திலும், அதிபர் நியமனத்திலும் வெளி மாவட்டங்கள் செல்லாத சுமார் 44 அதிபர்கள் யாழ். மாவட்டத்தில் இடமாற்றம் இன்றி தங்கியுள்ளனர். அவர்களுக்கான இடமாற்றம் தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்தபோதும் அரசியல் தலையீடுகள் காரணமாக அந்த இடமாற்றம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் இருந்து 22 அதிபர்களுக்கு வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட போதும் அவர்களும் கடமைக்கு செல்லவில்லை. ஆகவே இந்த விடயம் தொடர்பில் வட மாகாண ஆளுநர் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அதிபர்களற்ற பாடசாலைகளுக்கு விரைவாக அதிபர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# மனநோயாளி என்பது தெரிந்தவுடன் விலக முயன்றாள்: கொன்றுவிட்டேன்

## ரேஸ் கோஸ் கொலை தொடர்பில் பரபரப்பு வாக்குமூலம்

தான் ஒரு மனநோயாளி என்று தெரிந்ததும் தன்னைவிட்டு விலக முயன்ற தனது காதலி வேறு யாருக்கும் கிடைத்துவிடக்கூடாது என்று நினைத்தே குத்திக்கொன்றேன் என்று பரபரப்பு வாக்குமூலம் வழங்கியிருக்கிறார் கொழும்பு ரேஸ் கோஸ் படுகொலைச் சந்தேகநபரான பல்கலைக்கழக மாணவன்.

கொழும்பு குதிரை பந்தய மைதானத்தில் இளம் பெண் ஒருவர் பட்டப் பகலில் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் மூன்றாம் வருடத்தில் கல்வி கற்கும் ஹோமாகம கிரிவத்துடுவ புபுது உயன பகுதியைச் சேர்ந்த சத்துரி ஹன்சிகா மல்லிகாராச்சி என்ற 24 வயதுடைய மாணவியே இவ்வாறு உயிரிழந்திருந்தார்.

உயிரிழந்த யுவதியின் காதலன் என அடையாளம் காணப்பட்ட கொழும்பு பல்கலைக்கழகத்தில் மூன்றாம் ஆண்டு படிக்கும் வெல்லம்பிட்டியவில் வசிக்கும் பசிந்து சதுரங்க என்ற மாணவன் இந்தக் கொலை தொடர்பாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கைதான சந்தேக நபர் கொலைக்கான காரணம் குறித்து தெரிவித்த வாக்குமூல விவரங்களைப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சத்துரியிடம் முக்கியமாக பேச வேண்டும் என அவளை ரேஸ் கோர்ஸ் அரங்கிற்கு அழைத்து வந்தேன். பின்னர் கண்களைக் கட்டி கழுத்தில் கத்தியால் குத்தினேன்.

சூட்டி என்னை எப்போதும் மனநோயாளி என்று அழைப்பாள். அதனால் தான் எனக்கு வலி ஏற்பட்டது. அவள் வேறு யாருக்கும் சொந்தம் ஆகக்கூடாது, அவளைக் கொன்றுவிடவேண்டும் என்று திட்டமிட்டே அவளைக் குதிரைப் பந்தய அரங்கிற்கு அழைத்து வந்தேன்.

2019 முதல் நான் மனநோய்க்கு மருந்து எடுத்து வருகிறேன். 2020 இல் சூட்டியுடன் நட்பு ஏற்பட்டது. நான் மருந்து சாப்பிடுகிறேன் என்று அவளிடம் சொல்லவில்லை. ஆனால் அவள் 4-5 மாதங்களுக்கு பின்பு அதைப் பற்றி அறிந்தாள். நான் காயப்படுத்தப்பட்டேன். அவள் எங்கள் உறவை நிறுத்த முற்பட்டாள். அவள் மாறினாள். அவள் தொடர்ந்து என்னை ‘பைத்தியம்’ என்று அழைத்தாள்.

வேறொரு உறவின் காரணமாக அவள் மாறிவிட்டாளா என்று நான் யோசித்தேன். ஆனால் அவளுக்கு அத்தகைய தொடர்பு இல்லை. அவள் என்னை எப்போதும் மனநோயாளி என்று அழைப்பதால் நான் வேதனைப்பட்டேன். உறவையும் துண்டிப்பதால் அவள் எனக்கு சொந்தமில்லை. நான் அவளை வேறு யாரும் வைத்திருக்கக்கூடாது என்பதற்காக அவளைக் கொல்லத் திட்டமிட்டேன்.

கடந்த சனிக்கிழமை அவள் என்னிடம் தகராறு செய்தாள். இந்த உறவை முடித்து விடுவோம் என்றாள். ஞாயிற்றுக்கிழமை வெல்லம்பிட்டி சந்தியில் இருந்து கத்தி ஒன்றை வாங்கினேன். செவ்வாய்க்கிழமை வீட்டில் இருந்து கத்தியை பையில் வைத்துக்கொண்டு பல்கலைக்கழகத்துக்குச் சென்றேன்.

காலையில் முதல் விரிவுரையில் கலந்துகொண்ட பிறகு, முக்கியமாகப் பேசவேண்டியுள்ளது. ரேஸ் கோஸ் மைதானத்துக்குச் செல்லலாமா என்று ‘சூட்டி’யிடம் கேட்டேன். முதலில் அவள் மறுத்தாள். பின்னர் கட்டாயப்படுத்தப்பட்டதால் ஒப்புக்கொண்டாள்.

இருவரும் ரேஸ் கோஸ் நோக்கி நடந்தோம். குளத்தில் நின்று பேசினோம். நான் அவள் மீது கோபம் கொண்டதால், அவளைக் கொல்ல நினைத்தேன். நான் அவளிடம் “உனக்கு ஒரு சர்ப்ரைஸ்” இருக்கு. என அவளை ரேஸ் கோஸ் மைதானத்திற்கு அழைத்து வந்தேன். கண்களை கட்டி கழுத்தில் கத்தியால் குத்தினேன்.

அவள் கண்களை மூடி யிருந்த துணியை கழற்றிவிட்டு உதவிக் காக கத்தினாள். அப்போது, மீண்டும் கத்தியால் குத்தினேன். சம்பவ இடத்திற்கு அருகில் இளம் பெண்கள் குழு ஒன்று இருந்ததால், அவர்கள் அந்த இடத்துக்கு வருவார்கள் என்று பயந்து, நான் அந்த இடத்தை விட்டு ஓடினேன்.

ஓடிப்போனாலும் ‘சூட்டி’ என்று திரும்பிப் பார்த்தேன், அந்த நேரத்தில் ‘சூட்டி’ அசைவின்றிக் கிடந்தாள். நான் நேராக ஒரு பஸ்ஸில் ஏறி வெல்லம்பிட்டிக்கு சென்றேன். பின்னர் வீட்டுக்குச் சென்றேன்.

நான் வீட்டிற்குச் சென்று எனது புத்தகப் பைகள் மற்றும் பொருள்களை வீட்டில் வைத்துவிட்டு இரண்டு முறை கொலன்னாவ ஆற்றில் குதித்து தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தேன் – என்று வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதேவேளை, சந்தேகநபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதால், தேசிய மனநல மருத்துவ நிறுவகத்தின் விசேட வைத்தியர் ஒருவரை அணுகி, அவரது மனநிலை தொடர்பாக அறிக்கை பெறுமாறு சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிவான், சந்தேகநபரை தேசிய மனநல மருத்துவ நிறுவனத்தின் விசேட வைத்தியரிடம் அனுப்பி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## கல்வியங்காட்டில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையாளர் கடையைப் பூட்டிக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமான நிலையில் மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 7 பேர் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த கடை உரிமையாளர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## இந்திய......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பயணத்தின்போது அவர் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரியுடன் இரு தரப்புப் பேச்சுக்களில் ஈடுபடுவார். மேலதிகமாக ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரையும் சந்தித்துப் பேசுவார்.

இந்திய அமைச்சருடன் அயலுறவுத்துறை அமைச்சின் இணைச் செயலாளர் புனீத் அகர்வால், பணிப்பாளர் சந்தீப் குமார் பையப்பு. பதில் செயலாளர் (இலங்கை) நிதி சௌத்திரி, பதில் செயலாளர் ராகு பூரி ஆகியோரும் இலங்கை வந்துள்ளனர்.

இலங்கையின் இந்திய முதலீடுகள் தொடர்பில் இந்தப் பயணத்தின்போது முக்கியமாக ஆராயப்படவுள்ளது. துறைமுகங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தித் துறைகளில் முதலிடுவதற்கு இந்தியா ஆர்வமாக உள்ளது. அது தொடர்பான சாத்தியங்களை ஆராய்வதே பயணத்தின் முக்கிய நேக்கமாக இருக்கும்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்படும். மேலதிகமாக அரசியல் தீர்வு தொடர்பிலும் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் தனது அக்கறையை வெளிப்படுத்துவார்.

நாளை அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி ஆகியவற்றின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.01.2023 இல் வெளியிடப்பெற்றது.